● மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கூறுகிறார்

## போருக்கெல்லாம் 'தாய்ப் போர்' ஆனையிறவுப் போர்

ஆனையிறவு முகாம் புலிகளிடம் வீழ் ந்துவிடக்கூடாது என்பதற்காக இராணுவத்தினர் தீவிரமாகப் போர் புரிகின்றனராம். மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ இத்தகவலை வெளியிட்டுள்ளார். இராணுவம் போருக்கு எல்லாம் 'தாய்ப்போர்' இதுவென தாக்குதல் நடாத்த ஆயத்தமாக இருப்பதாகவும் கொப்பேகடுவ தெரிவித்துள்ளார். கடற்கரைப்பகுதியில்தரையிறக்கப்பட்ட படையினர் முன்னேறுவதைத் தடுப்பதற்காக புலிகள் எல்லாவழியிலும் போராடுகின்றனர் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார். பாதைகளில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டினார். இபபோது ஆனையிறவில் நடைபெறும் போரினால் பிரிவினைப் போரை முடிவுக்குக் கொண்டு வந்துவிடலாம் என தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டாராம் கொப்பேகடுவ. ஆனையிறவுப் போர், போர்முனையில் திருப்பு முனையாக அமையுமா என்பதை இப்போது கூறமுடியாது, இதை வரலாறே உணர்த்தும் என்றார் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ. வளைகுடாவில் ஈராக் ஜனாதிபதியும் அமெரிக்காவுக்கு எதிரான தனது போரை 'போருக்கெல்லாம் தாய்ப்போர்' எனச் சூளுரைத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.


பக்கங்கள் நான்கு — விலை ரூபா- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 243 பிரசோறபதி ஆடி 13 ( 29 - 07 - 1991 ) திங்கள்


# புல்லாவெளியில் உக்கிர மோதல்

# 5 கவச வாகனங்கள் நாசமாகின

## 17 போராளிகள் வீரமரணம்

**நேற்றுக்காலை 9மணியளவில் புல்லாவெளிப்பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் கடும் விமானத்தாக்குதலின் உதவியுடன் முன்னேற முற்பட்டபோது புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் மோதல் வெடித்தது.**

படையினருக்கு உதவியாக பல பொம்மர்கள், ஹெலிகள், வை-12 விமானங்கள் என்பன தாக்குதல் நடாத்தின. மாலைவரை இரு பகுதியினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

படையினர் அரை கிலோ மீற்றர் தூரம்வரை முன்னேறினர். படையினரை எதிர்த்துப் புலிகள் தொடர்ந்து கடும் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

நேற்றைய மோதலில் படையினர் தரப்பில் பெரும் சேத மேற்பட்டுள்ளதுடன், புலிகளின் தாக்குதலில் 5 கவச வாகனங்கள்நாசமாகின.

விடுதலைப்புலிகள் தரப்பில் 17 போராளிகள் வீரமரணமடைந்தனர்

## 50 போராளிகள் வீரமரணம்

நேற்று முன்தினம் ஆனையிறவு தடை முகாம் பகுதியில் நடைபெற்ற மோதலில் லெப். கேணல் சரா, மேஜர் குகதாஸ் உட்பட 50 போராளிகள் வீரமரணமடைந்தனர்

## திருநெல்வேலியில் மாவீரருக்கு அஞ்சலி

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி யுத்தத்தில் வீரமரணமடைந்த வேங்கைகள் ஆறுபேரினது புகழுடம்புகள் நேற்று நண்பகல் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பெருந்தொகையான மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டனர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி அலுவலர்கள் போர்க்காலச் சேவை

ஆனையிறவில் நடைபெறும் உக்கிரமமான போரில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள போராளிகளுக்கு பராமரிப்புச் சேவைசெய்வதற்கு சனசமூக நிலைய உறுப்பினர்களும் பிரதேசசபை, நகரசபை, உப அலுவலக உத்தியோகத்தர்களும் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர்.

இச்சேவையில் சேர்ந்து தொண்டாற்ற விரும்புவோர் தத்தமது நிலையங்களூடாக பிரதேச சபைப் பொறுப்பாளர்களிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இரத்ததானம் செய்யுமாறு அவசர வேண்டுகோள்

இரத்த வங்கியில் இரத்தம் குறைவடைந்து வருவதால் உடனடியாக இரத்தம் தேவைப்படுவதாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தானத்தில் சிறந்த இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள பாலம் பணிமனையில் தமது பெயர்களை உடனடியாகப் பதிவு செய்யுமாறு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கடற்படை சுட்டு இளைஞன் பலி

பருத்தித்துறை கடற் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா கடற்படை கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மீனவர் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை முனைக் கடற்பிரதேசத்தில்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## விமான எரிகுண்டு வீச்சு தொடர்ந்து தீவிரம்

கட்டைக்காடு - வெற்றிலைக் கேணியில் இடம்பெற்றுவரும் அகோர விமானக் குண்டு வீச்சுகள் ஒருபுறம், மறுபுறத்தில் வை-12 விமானங்கள் நேபாம் குண்டு எரிகுண்டுகளை வீசுவதாகவும், அப்பகுதியிலுள்ள பற்றைக்காடுகள் எரிவதாகவும் தெரிகின்றது.

எரிகுண்டுத் தாக்குதல்களையும் அவ்ரோ விமானங்கள் புரிந்துவருகின்றன.

நேற்றுக்காலை வரையில் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் ஆகோரமாக இருந்தன.

ஆனையிறவை நோக்கிச் செல்ல முயற்சிக்கும் இடங்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் மீண்டும் தாக்கு 8 அதிரடிப்படையினர் பலி

நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்டத்தில் முகாமிலிருந்து வெளியேறிய படையினர் மீது விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டதில் எட்டு இராணுவத்தினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

### பீரங்கிப்படகு தாக்குதல்

மருதங்கேணி, வத்திராயர் ஆகிய பகுதிகளில் நேற்று இரவு நடந்த கடற்படை பீரங்கித் தாக்குதல்களில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

இரவு 10 மணியளவில் நடந்த இப்பீரங்கித் தாக்குதலில் பயன் தரு மரங்களான பனை, தென்னை போன்ற மரங்கள் முறிந்து தொங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது.

காரைநகரிலிருந்து வெற்றிலைக்கேணிப் பக்கமாகச் சென்றகடற்படைக் கப்பல் ஒன்றே தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (43, 50)

கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை 9 மணியளவில் களுவங்கேணிப் பகுதியை நோக்கி 25 க்கும் மேற்பட்ட படையினர் முன்னேறிவந்தனர்.

களுவங்கேணிப்பகுதியை வந்தடைந்த இராணுவத்தினர் மீது புலிகளின்பதினைந்து

— 4 ஆம் பக்கம் பார்க்க

பாதுகாப்பு அமைச்சு

## கிழக்குப் படையினரை உஷாராக இருக்க வேண்டுகோள்

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் படையினரை எச்சரிக்கையாக இருக்குமாறு இராணுவ நடவடிக்கைகள் ஆணைக்குழு அங்குள்ள இராணுவ முகாம்களுக்கு நேற்று அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப்பகுதியில் புலிகள் தாக்

— 4 ஆம் பக்கம் பார்க்க

கோயம்புத்தூரில் சம்பவம்

## பொலிஸ் புகமுயன்றபோது வீட்டினுள் குண்டு வெடிப்பு

கோயம்புத்தூரில் நேற்று தமிழக பொலிஸார் வீடொன்றினுள் புக முயன்ற போது வீட்டினுள் இருந்து குண்டு வெடித்தது.

இதனால் வீட்டினுள் இருந்த இருவர் படுகாயமடைந்ததாகவும் பொலிஸாருக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை எனவும் தமிழகப் பொஸார் அறிவித்துள்ளனர்.

குண்டு வெடித்து பெரும் சேத மேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் வீட்டில் இருந்து சில தொலைத் தொடர்புச் சாதனங்களை தாம் மீட்டதாக பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

## புதுக்காடு பகுதியிலும் விமானக் குண்டுவீச்சு

தென்மராட்சிப் பகுதியில் உள்ள கரந்தாய், புதுக்காடு ஆகிய பகுதிகளில் விமானப் படையின் விமானங்கள் குண்டு வீசியதில் அப்பகுதியில் உள்ள பல வியாபார நிலையங்களும் பல வீடுகளும் தீப்பற்றி எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல் காரணமாக இயக்கச்சி, முகாவில், பளை ஆகிய பகுதிகளில் உள்ள பல வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (43)

இலங்கை - இந்திய அமைச்சர்கள்

## புலிகளுக்கு எதிராக நடவடிக்கை குறித்து ஆய்வு

இந்தியாவிலும், பாக்கு நீரிணைப்பகுதியிலும் விடுதலைப் புலிகளுக்குஎதிராகஎத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம் என புதுடில்லி சென்றுள்ள ஹரல்ட் ஹேரத் ஆராயலாம் என ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

பொருளாதாரக் கூட்டுக் குறித்தே முக்கியமாக இருதரப்பும் பேச்சு நடாத்தும் என்று குறிப்பிட்டபோதிலும் புலிகள் தொடர்பாகவும் முக்கிய கவனம் எடுக்கப்படலாம் என ஏஜென்சிச் செய்திகள் சுட்டிக்காட்டின.

## மடு அகதிகள் முகாமிற்கு உணவு செல்வதில் தடை

மடுவில் உள்ள இருபத்தையாயிரம் அகதிகளுக்கு மாதாந்தம் 540 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தேவைப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளில் மடுப்பகுதிக்கு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பருப்பினங்களில் சத்து மிக்க கௌபி

கௌபிஎன்னும் பருப்பினம் புரதச்சத்து மிகுந்த ஒரு தானியம். அதைப் பயிரிடுவதால் நிலத்தில் நைதரசன் வளம்பெற்றுத்தரை திருந்தும். பாசிப்பயறுஉழுந்துவகைகளைப்போல கௌபி எமக்குப் பயன் தருவதில் இடம் பெறுகின்றது.

எமது உலர்வலயத் தாழ்பூமி இத்தகைய பருப்பு வகைகளுக்கு உகந்த நிலம் எங்கள் தென்னந்தோப்புகளிலும் இவற்றைப் பயிரிடலாம். இவை மூன்று மாதங்களுள் முழுப்பலனையும் தரும் கௌபியைஅறுவடை செய்வது மிகவும் சுலபமானதாகும். கௌபி பருப்பில் பல இனங்கள் உண்டு. அவை-ஈரா கௌபி, பம்பாய் கௌபி, எம்ஐ 35 கௌபி, ஆலிங்ரன் கௌபி என்பனவும் பிறவுமாம் இவற்றுள் பம்பாய் கௌபி நடுத்தர பருமன் உள்ள கபில நிறத்ததாகும். இதை கொண்டல் கடலையை சுண்டல் செய்வது போல அவித்தும் உண்ணலாம்.

எம்ஐ 35 என்னும் இனம்மைசூர்ப்பருப்புக்கு நிகரானது. மஞ்சள் நிறமுள்ளது ஆலிங்ரன் கௌபி துவரம் பருப்புபோல கறிசமைப்பதற்கு உகந்தது.

கௌபி பயிரிடுவதற்கான மேடை 60 ச. மீ அகலமுள்ளதாய், மற்ற மேடைக்கு இடையில் 30 ச. மீ இடைவெளிஅமைவதாய், வரிசைக்குவரிசை30. ச. மீ. ஒரமுள்ளதாய் பயிருக்குப்பயிர் 15 ச. மீ இடைவெளிஉள்ளதாய் அமைதல்நன்று. பசளை அடிக்கட்டாயிடும்போது என்பீகே இடலாம். பூக்கும் வேளையில் மேற்கட்டாக யூரியா என்னும் பசளையை இடலாம். களைகளை நீக்குதல் கட்டாயமாகச் செய்தல் வேண்டும்

இதற்கு நீர்ப்பாசனப் செய்யும்போது, சிறு போகத்தில் மூன்றுவாரம் வரையும் நான்கு நாள்களுக்கொரு முறையும், பின்னர் அறுவடைக்கு இருவாரங்களுக்கு முன் எட்டு நாள்களுக்கொருமுறையும் பாய்ச்சுக.

கௌபி அறுவடை சுலபமானது. அறுவடைப்பருவத்தில் இரண்டு மூன்று தடவை அவற்றைப் பறித்துக் கொள்ளலாம்.

★ யாழ் பிரஜைகள் குழு வேண்டுகோள்

# பட்டினியைத் தவிர்க்க பயிர்ச்செய்கை

# பன்முகப்படுத்தி உழைப்போம்

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் கட்டவிழ்த்துவிட்ட அழிவுப்போர் ஆரம்பமாகி ஒருவருடம் முடிந்துவிட்டது. அவர்கள் கையாண்டு வரும் போர் உபாயங்களில் பொருளாதாரத் தடையே மிகவும் கொடூரமானது. எங்களுக்குத் தேவையான உணவு வகைகள் முதல், பிற அத்தியாவசியப் பொருள்களை வழமையில் தனியார் வியாபாரிகளும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், அரச நிறுவனங்களும் கொழும்பிலிருந்து வாங்கியும், இறக்குமதி செய்தும் லொறிகள் மூலமும் புகையிரதம் மூலமும் பெருந்தொகையாக வருவித்து வந்தனர்.

ஆனால் பொருளாதாரத் தடை ஏற்பட்ட காலம் தொடக்கம் இராணுவக் கெடுபிடிகளினால் லொறிகள் மூலம் பெறப்படும் உணவு முதலியபொருள்கள் கொண்டு வர கொடுப்பனவு பல செய்ய வேண்டி இருப்பதாலும் உணவு முதலியபொருள்களின் விலைகள் பன்மடங்கு அதிகரித்ததும் அல்லாமல் பொருள்கள் கிடைப்பதும் கஷ்டமாகவே இருக்கிறது. பிற நாடுகளின் நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் ஓர் கண்துடைப்பாக அரசாங்கம் கப்பல் மூலம் வரும் உணவுகளை அனுப்ப முற்பட்டது. ஆனால் அவ்வாறு அரை குறையாக அனுப்பப்படும் கப்பல்களில் வரும் பொருள்கள் இடம் பெயர்ந்தோருக்கு மட்டும் மாதமொன்றுக்கு மூன்று கிழமைகட்கு நிவாரணமாக விநியோகிக்கப்படுகிறது. மற்றோருக்கு 56 கிழமைகளுக்குப் பொதுவாகப் பதின்மூன்று கிழமை நிவாரணமே வழங்கப்பட்டது. கப்பல் மூலம் அனுப்பப்பட்ட உணவு வகைகளின் தொகை மக்களுக்குச் சாதாரணமாகத் தேவைப்படும் தொகையில் 20 வீதமே வந்துள்ளது. கடைசியாக வந்த உணவுப் பொருள்கள் பெரும்பாலும் பழுதடைந்த நிலையில் பாவிப்புக்கு உகந்ததாக இல்லை அது மட்டுமல்ல கப்பலில் ஏற்றப்பட்டதெனக் கூறப்படும் தொகையிலும் பார்க்க இங்கு வந்து சேரும் தொகை குறைவாகவே காணப்படுகிறது. இதன் தாற்பரியம் என்னவென்றால் அரசாங்கத்தினர் தாங்கள் கப்பல் மூலம் உணவு ஒழுங்காக அனுப்புவதாக வெளி உலகுக்குக் காட்டிக்கொண்டு தமிழ் பேசும் மக்களைப் பட்டினிக்குள்ளாக்குவதுதான், பட்டினியால் மரணம் ஏற்படும் நிலைமை மிக விரைவில் வந்துகொண்டே இருக்கிறது.

நாங்கள் ஒவ்வொருவரும் எங்களால் இயன்றளவில் உணவு உற்பத்தியில் உடனடியாக ஈடுபடுதல் அத்தியாவசியமாகின்றது. வழமையாகப் பயிர் செய்யும் விவசாயப் பெருமக்கள் பெரும்பாலும் தானிய வகைச் செய்கையிலேயே ஈடுபடல் வேண்டும். காலம் தாழ்த்துவோமானால் பட்டினியை எதிர் நோக்க வேண்டிய அவல நிலையை எதிர்கொள்ள வேண்டிவரும்.

உணவு உற்பத்திக்கு வேண்டிய வசதிகளை இங்கிருக்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏனைய ஸ்தாபனங்களும் விவசாயிகட்கு வழங்குவதற்கு முன் வரவேண்டும். (19)

## பெறுபேறுகள் தபாலில்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக உயர் தொழில் ஆங்கில கற்கை நெறியின் 89/90ஆம் ஆண்டுப் பரீட்சை முடிவுகள் பரீட்சார்த்திகளின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. யாழ் பிராந்திய நிலையத்திற்கு அப் பரீட்சையை மீண்டும் எடுக்க வேண்டிய மாணவர்களின் பெயர்ப்பட்டியலும் அக் கற்கை நெறியைத் திரும்ப கற்க வேண்டிய மாணவர்களின் பெயர் பட்டியல் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ப-7)

## பிரதிநிதிகள் கூட்டம்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவு சங்க தொழிற் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் தொழிற் சங்கம் இல்லாத சங்கங்களின் பிரதிநிதிகள் (மூவர்) ஆகியோருக்கான போர்க்கால நடவடிக்கை சம்பந்தமான கலந்துரையாடல் 30.7.91 செவ்வாய் காலை 10.00 மணிக்கு யாழ் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகலரையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளார்கள்.

## அஞ்சலிக் கூட்டம்

ஆனையிறவிலும், கட்டைக்காட்டிலும் இடம்பெற்ற நேரடிமோதலின்போது வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட போராளிகளான நந்தன் (சின்னத்துரை ஜீவானந்தம் மட்டுவில் வடக்கு தவச்செல்வி (சித்ராஞ்சலி இராமநாதன், கேடில்ஸ்நகர் கெற்பெலி (மிருசுவில்) ஆகியோரது புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக முதலில் மட்டுவில் சந்திரபுரங்கள் தவரோதயா கல்லூரியிலும், பின்னர் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது. இதில் பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலிசெலுத்தினார்கள்.

பின்னர் இந்த மாவீரர்களின் புகழுடல்கள் பாண்ட் வாத்திய சகிதம் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு புலிகளின் மரியாதை வேட்டுகளுடன் மாவீரகள் துயிலும் புனித மண்ணில் தீயுடன் சங்கமமமானது. (ப5)

## மீண்டும் துணுக்காயில்

துணுக்காயில் ஏற்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலினால் ஆலங்குளத்திற்கு இடமாற்றம் செய்ய பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மீண்டும் துணுக்காயில் இயங்கி வருகிறது. இச் சங்கக் கட்டிடத்தில் மாங்குளம் மக்கள் வங்கிக் கிளையும் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (38)

# இங்கிலாந்து கிரிக்கெட் அணி

## மேற்கிந்தியதீவு அணியைவென்றது

சமீபத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 22 வருடகால நீண்ட இடைவெளியின் பின், மேற்கிந்திய தீவுகள் அணியைக்கிரிக்கெட் 'ரெஸ்ற்' போட்டியில் தோற்கடித்துச் சரித்திரம் படைத்துள்ளது

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இப்போட்டியின் இரண்டாவது இனிங்ஸில், இங்கிலாந்து அணி பெற்ற 252 ஓட்டங்களில், அதன் அணித் தலைவர் கிரகம் கூச், ஆட்டம் இழக்காமல் பெற்ற ஓட்டங்கள் 154. இதன் மூலம் கூச் ரெஸ்ற் பந்தயங்களில் ஆட்டம் இழக்காமல் சதம் போட்ட, இங்கிலாந்து 5ஆவது வீரர் என்ற புகழையும் பெற்றுக்கொண்டார்.

கூச்சுக்கு முன் ஆட்டம் இழக்காமல் சதம் போட்ட வீரர்கள் விவரம் இதோ;- 1891 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்குஎதிராகச் சிட்னியில் நடைபெற்ற ரெஸ்ரில் இங்கிலாந்து அணி பெற்ற ஓட்டங்கள் 307. இதில் ஆர். அபெல் பெற்ற ஓட்டங்கள் 132. 1899 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவிற்கு எதிராக ஜோணஸ் பேர்க்கில் நடைபெற்ற ரெஸ்ரில் இங்கிலாந்து அணி பெற்ற ஓட்டங்கள் 237. இதில் 'பி. எவ். வானர்' பெற்ற ஓட்டங்கள் 132. 1950 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக ஓவலில் நடந்தரெஸ்ரில் இங்கிலாந்து அணி பெற்ற ஓட்டங்கள் 344. இதில் லென் கட்டன் பெற்ற ஓட்டங்கள் 202. 1980 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அடல் ஏயிட்டில் நடைபெற்ற ரெஸ்ரில் இங்கிலாந்து அணி பெற்ற ஓட்டங்கள்215. 'ஜீஓவ் போய்கொட்' பெற்ற ஓட்டங்கள் 100. (16)

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தாமே பாடல் இயற்றலாம்

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பிற ஆசிரியர்கள் இயற்றிய சிறுவர் பாடல்களை எதிர்பார்க்காது தாமே சிறுவர்கட்கான பாடலை ஆக்கி இசையமைத்துப் பாடத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற மூன்று நாள் பொம்மலாட்டக் கருத்தரங்கின் இறுதி நாள் செயற்திட்ட நிகழ்ச்சியின் போது யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில் மாணவர்கட்கு சலிப்பு ஏற்படும்போது அச்சலிப்பைப் போக்க இப் பொம்மலாட்டம் சிறந்த கற்பித்தலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனாலேயே முதன் முதலாக யாழ் மாவட்டத்தின் சகல கோட்டங்களிலும் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சியில் பங்குபற்றிய ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் அதிபரின் ஒத்துழைப்புடன் மாதமிருமுறையாவது இப் பொம்மலாட்டத்தை நடத்த வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியின் போது கோப்பாய் வட்டவைக் கொத்தணி அதிபர்கள், கல்வித் திணைக்களக் கோட்ட அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றார்கள், மாணவர்கள், கல்வி ஆலோசகர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். (23)

# அர்ஜுனா ரணதுங்கா பற்றி பாராளுமன்றத்தில் ஸ்ரீமாவோ

இலங்கை கிரிக்கட் கோஷ்டியின் தலைமைப் பதவியில் இருந்தும் அக்குழுவிலிருந்தும் அர்ஜுன ரணதுங்க நீக்கப்பட்டது ஏன் என்று எதிர்க்கட்சித்தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்த விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் நந்தா மத்தியூ அர்ஜுன ரணதுங்க மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்றார்.

காலியில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் அவர் ஒருவரைத்தாக்கி அவதூறாகப் பேசியுள்ளார்.

எதிர்காலத்தில் அர்ஜுனா திருந்தி நடப்பவராயின் அவர் மீண்டும் கிரிக்கட்கட்டுப்பாட்டுச்சபையால் கிரிக்கட் குழுவில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் அமைச்சர் கூறினார்.

# விபுலாநந்த அடிகள் நூற்றாண்டு விழா

மூத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் நூறாவது ஆண்டு விழா நேற்று முன் தினம் கொழும்பில் கொண்டாடப்பட்டது.

கால்கோள் விழாவாகக் கொண்டாடப்பட்ட இவ் விழாவில் இந்துக் கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி தேவராஜ் கலந்து கொண்டார்.

விபுலாநந்த அடிகளார் இலங்கையில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலும் பாராட்டப்பட்டு அங்கீகரிக்கப்பட்டார்.

இராஜா சேர் அண்ணாமலைச் செட்டியார் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்த போது விபுலாநந்த அடிகளாரை தமிழ்த்துறை தலைவராக நியமித்தார். இவரது புகழ் உலகளாவியரீதியில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டது எனவும் ஆறுமுகநாவலருக்குப் பிறகு விபுலாநந்த அடிகள் தமிழகத்தில் பெரும்பாராட்டும் பெற்றார். (ப-11)

# பொருளாதார ஒத்துழைப்பு இலங்கை இந்திய ஒப்பந்தம்

இந்தியா சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் ஹரோட் ஹேரல்த் இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து பேச்சு நடாத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதாரம் மற்றும் வேறு துறைகளுக்கு இரு தரப்பினரின் ஒத்துழைப்பைப் பெறுவது குறித்து இலங்கை-இந்திய கூட்டு ஆணைக்குழு அமைக்கும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப் படவுள்ளது.

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீமுனீஸ்வரன் தேவஸ்தானத் தேர்த்திருவிழா இன்று மாலை மூன்று மணிக்கு நடைபெறும்.

# எங்கள் தமிழ்மொழி என்றும் இனியது

தமிழராகிய நாம் நாடோறும் பேசி வரும் தாய்மொழி தமிழேயாகும். நாம் சிறு குழவியாய் இருந்த போது நம் அன்னையின் தீம் பாலைப் பருகிப் பசி தீர்ந்து அவள் மடியிற் கிடக்க, அவள் நம்மைக் கொஞ்சி மூத்தம் வைத்து நம்மைப் பாராட்டிப் பேசியது தமிழ்மொழியிலன்றோ? சிறு குழந்தையாய் இருந்த அந்தக் காலந்தொட்டு மறுபடியும் நாம் இந்த உலகை விட்டு அகன்று போகும் வரையில் நம் தாய் தந்தையரோடும் உடன் பிறந்தவரோடும் மனைவி மக்களோடும் நம் நாட்டில் உள்ளவரோடும் நாம் ஊடாடி உறவாடிப் பேசுவதும் நமதருமைத் தமிழ் மொழியிலன்றோ? இங்ஙனம் நமது உயிரோடும் உடம்போடுங் கலந்து நமதறிவைத் தன்வண்ணம் ஆக்கிக், கனாக் காணுங் காலத்துங் கனாவுலகில் உள்ளவரோடு நாம் பேசுகையில் அப்பேச்சோடும் உடன் வந்து நிற்பதாய்க் கிளர்ந்து விளங்குவது நமது இனிய செந்தமிழ் மொழியேயாய் இருத்தலின், நமதுயிர் இவ்வுலக வாழ்வைத்துறந்து மறுமையுலகிற் சென்று உலவும்போதும் நமக்குற்ற துணையாய் நம்மோடு உடன் வந்து நிற்பது தமிழ்மொழியேயாகுமென்பது தெளிவாகப் பெறப்படுகின்றதன்றோ?

— மறைமலை அடிகள்

# "நாம் எல்லோரும் ஒன்றாக இணைந்து எம் தாயகத்தைமீட்போம்" - பரா

யாழ் மாவட்டத்தில் 1,50,000 குடும்பங்கள் உள்ளன. $1\frac{1}{2}$ இலட்சம் போர் வீரர்களை உருவாக்கினால் எமது முழுப்பிரதேசத்திலிருந்து முழு இராணுவமுகாமினையும் அழித்து மீட்டெடுக்க முடியும்.

ஆயுதம் ஏந்திப் போரிடாவிட்டால் முழுத்தமிழினமும் அழியும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா வண்ணார்பண்ணை மேற்குஐயனார் கோவிலடியில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில்: ஆனையிறவு முகாம் தகர்ப்புத் தொடங்கி 17 நாள்களாகி விட்டன. எதிரி தனது பலம் கொண்ட வரையில் மும்முனைத் தாக்குதல் நடாத்தி எங்கள் முழுப் பிரதேசத்தையும் ஆக்கிரமிக்கப் பார்க்கிறான். மும்படைத் தாக்குதலுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

எதிரிகளால் எம்மினத்திற்கு அபாயம் சூழ்ந்துள்ளது. எம்பிரதேசத்தை ஆக்கிரமிக்க கொழும்பில் சிங்கள இளைஞர்களை திரட்டுகின்றனர். இருபது ஆயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களை இராணுவத்திற்கு சேர்த்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது

எங்கள் மண்ணை தங்களது இராணுவம் ஆளவேண்டும் என்ற காரணத்தால் எதிரியானவன் இன்று தனது முழுப் பலத்தையும் கொட்டிக் கொண்டிருக்கிறான்.

இந் நிலையில் தமிழர்கள் ஒவ்வொருவரும் ஆயுதம்ஏந்தி எமது மண்ணை மீட்காவிடில் எம் பிரதேசத்தில் பல இராணுவ முகாம்கள் அமைவதற்குத் தமிழ் மக்களே வழிவிட்டவர்களாவோம்

இன்று கிழக்கு மாகாணத்தைப் பாருங்கள், தமிழ்மக்கள் அகதிமுகாம்களில் வாழுகிறார்கள். இளைஞர்கள், யுவதிகள் வாழ முடியாத நிலையில் உள்ளனர். எங்கும் இராணுவ முகாம்கள்,சித்திரவதைக் கூடங்களே கிழக்கு மாகாணத்தில் உள்ளன. ஆனால் யாழ் மாவட்டத்தில் அந்நிலை இல்லை. யாழ் மாவட்டத்தில் படையினர் உட்புகாதபடி புலிகள் எமது பிரதேசத்தை வைத்துள்ளோம்.

போராளி எமது மண்ணை மீட்பதற்காக போரிடும் போது மக்களை, மண்ணை நேசிக்கிறான். எம்தேசம் விடுவிக்கப்பட வேண்டும் என்று கருதியே ஆயுதம் தூக்கிப் போராடுகிறான்.

இன்று நெருக்கடியான காலகட்டத்தில் தமிழன் வாழுகின்றான். நீங்கள் எல்லோரும் துணைப் படையில் சேர்ந்து எமது தேசத்தை மீட்கப் போரிடவேண்டும்.

மக்கள், போராளிகள் இறக்காமல் விடுதலை பெற்றது இல்லை எந்த ஒரு நாடும், வியட்நாமைப் பாருங்கள், சோவியத் ரஷ்யாவைப்பாருங்கள்.

நாம் சும்மா இருந்தால் எதிரி எம் பிரதேசத்தை விட்டுப் போகமாட்டான்

மக்கள் அநியாயமாக இறந்துள்ளனர். ஆனால் போராளிகள் எதிரியுடன் நெருக்கு நேர் மோதி வீர மரணத்தைத் தழுவியுள்ளனர்.

நேருக்கு நேர் நின்று போராடி வெற்றி பெற்று இன்று மரபு வழி இராணுவமாக உருவெடுத்து நேருக்கு நேர் போராடிக்கொண்டிருக்கிறோம்.

சகலரும் எங்களுடன் இணையுங்கள், ஆயுதம் தூக்கிப் போராட வாருங்கள். நீங்கள் இன்னும் பேசாமடந்தையாக இருக்க முடியாது.

அடுத்த இளம் சந்ததி வாழ வேண்டும் நாம் ஒன்றாக இணைந்து எதிரியை விரட்டியடித்து எம் தாயகத்தை மீட்க வேண்டும். (79)

## ஓய்வூதியக்காரருக்கு அனுமதிப் பத்திரங்கள் வந்தன

யாழ் செயலக ஓய்வூதியப் பகுதிக்கு நூற்றுக்கும் மேற்பட்ட ஓய்வூதிய அனுமதிப்பத்திரங்கள் வந்து சேர்ந்துள்ளன.

இவர்களது பெயர், ஓய்வூதிய இலக்க விபரங்கள் ஓய்வூதியக் கிளையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்ற பலருக்கும் ஓய்வூதிய அனுமதிப்பத்திரம் வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10 ,74)

## மாணிக்கவாசகர் குருபூசை

இலங்கை சைவ மன்றத்தின் மாணிக்கவாசகர் குருபூசைவிழா புற்றளை சித்திவிநாயகராலயத்தில் வடமராட்சி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு எஸ் செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

பிரம்மஸ்ரீ சோ. விஜயரத்தினக் குருக்கள் மங்கள விளககேற்றி குருபூசைவிழாவை ஆரம்பித்து வைத்தார்.

சிறப்புரைகள், சிவபுராணம் ஓதல், கலைமாமணி என். சிவசுப்பிரமணியம் குழுவினரின் வில்லுப்பாட்டு என்பனவும் இடம் பெற்றன. சிவஸ்ரீ வ. வே. நவரத்தினக் குருக்கள் நன்றியுரை வழங்கினார். (15)

## கிளிநொச்சி ஸ்தம்பித நிலையில்

புதுக்குடியிருப்பு கிளிநொச்சிப் பகுதிகளில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்து வருவதினால் இப்பகுதி செயலகங்கள் செயலற்றுக் கிடக்கின்றன.

மேற்குறித்த பகுதிகளில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக தொடர்ந்தும் ஊரடங்கு அமுலில் இருந்து வருவதினால் செயலகம் உட்பட பல அரச அலுவலகங்களும் இயங்க முடியாமல் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. (38)

## வெற்றி வேண்டி பிரார்த்தனை பூஜை

அச்சுவேலி பாரதிவீதி சங்கிலிவைரவ தேவாலயதர்மகர்த்தா சபையினர் போரில் இறந்த போராளிகளின் ஆத்மசாந்திக்கும், காயப்பட்டவர்களின் நலன் வேண்டியும் போராடிக் கொண்டிருக்கும் போராளிகளுக்கு இழப்பு இன்றி ஆனையிறவு - கட்டைக்காட்டில் வெற்றி வேண்டியும் இன்று நண்பகல் 12 மணிக்கு விசேட அபிடேகமும் ஆராதனையும் நடத்தவுள்ளனர்.

## தங்கை உட்பட மூவரை சுட்டுக்கொன்ற கோப்ரல்

தனது கூடப்பிறந்த சகோதரி அவளின் எட்டுநாள் குழந்தை, உட்பட மற்றும் ஒருவரையும் சுட்டுக்கொன்று தானும் தற்கொலை செய்து கொண்டாராம் இராணுவ கோப்ரல் ஒருவர்.

இச்சம்பவம் குளியாப்பிட்டியில் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது விருப்பத்துக்கு மாறாக தங்கை திருமணம் செய்து கொண்டதே இவர் இவ்வாறு செய்ததற்கு காரணமாயிருக்கலாமென விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. (33)

## கிழக்கு மாகாண நிலைமை சபையில் சபாநாயகர்

கிழக்கு மாகாணத்தில் நிலைமை இன்னும் மோசமாகவே இருக்கிறது அங்கு நிலைமை வழமைக்குத் திரும்பவில்லை என்று சபாநாயகர் எம். எச். முகமட் பாராளுமன்றத்தில் கூறினார்.

அங்கு சில பகுதியில் பகலில் மக்கள் வீடுகளில் இருக்கிறார்கள் மாலையானதும் அகதிமுகாம்களுக்கும் பாதுகாப்பான இடங்களுக்கும் செல்கின்றார்கள். காலையானதும் தமது வீடுகளுக்கு வருகிறார்கள் இவ்வாறு அவர்கள் பெருங்கஷ்டங்களை தினமும் அனுபவிக்கின்றனர்,

இந்த நிலைமையை மாற்றுவதற்கு சகலரும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு அவர் கூறினார். (33)

## கஷ்ட நிவாரணப் பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது

யாழ்ப்பாணம் சமூக சேவைப் பகுதியைச் சேர்ந்த செயலக உத்தியோகத்தர்கள், அரச முதியோர் இல்ல உத்தியோகத்தர்களுக்குக் கஷ்ட நிவாரண ஊக்குவிப்புப் பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது

யாழ் அரச செயலகத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இக் கஷ்ட நிவாரண ஊக்குவிப்புப் பணம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது முரசொலி வாசகர்கள் அறிந்ததே.

1. 1. 1988 தொடக்கம் 4. 7. 89 வரையான காலப் பகுதிக்குரிய மேற்படி பணம் வழங்குவதற்கு சுமார் ஆறு லட்சத்துத் தொண்ணூறு ஆயிரம் ரூபா தேவைபடுவதாகவும் அப்பணத்தினைத் தாமதமின்றி அனுப்பிவைக்கும்படியும் வடகிழ் மாகாண சபையின் சமூக சேவைப் பணிப்பாளரை யாழ் சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளர் அவர்கள் கேட்டுள்ளார்கள்.

இந்த நிதி கிடைத்ததும் இவர்களுக்கான கஷ்ட நிவாரண ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படும் என்று சமூக சேவைப் பகுதியின் உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (47)

## தமிழர் பிரச்சினை தீராததால் ஆயுதப்போராட்டம் ஏற்பட்டது

இன்று எமது நாடு இனப் பிரச்சினை காரணமாக அரசியல் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது. சகல கட்சிகளும் ஒருமித்துத் தனிப்பட்ட கோபதாபங்களை மறந்து இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வைக் காண முன்வரவேண்டும்.

இவ்வாறு லங்கா சமசமாஜக்கட்சி எம். பி. அத்தாவுட செனிவிரத்னா இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியபோது கூறினார்.

இனப் பிரச்சினையால் அழிவின் விழிம்புக்கு நாடு இட்டுச் செல்லப்பட்டுள்ளது. எனவே மனிதாபிமான ரீதியில் ஒரு பொதுவான இணக்கத்திற்குச் சகல கட்சிகளும் முன்வரவேண்டும்.

தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாததாலேயே இன்று வடக்குக் கிழக்கில் தமிழ் ஈழம் ஒன்றைக் கேட்டு ஆயுதப் போராட்டம் நடைபெற்று வருகிறது என்றும் அவர் கூறினார் (33)

## ஒத்திவைப்பு

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படவிருந்த மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக நிலையத் தலைவர் க. சிரிதரன் தெரிவித்துள்ளார்.

தொடர் : 5

# ஆனையிறவு

— 'அரவிந்தன்'

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய வன்னி நாட்டுச் சுதந்திர வீரன், படைத் திறனுடைய பண்டாரவன்னியன் மூன்று படைப் பிரிவுகளை இரவோடிரவாக அனுப்பி, ஆனையிறவு, பைல், பெஸ்சூற்றர் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டான். முள்ளியவளையிலிருந்து சுண்டிக்குளம் ஊடாகச் சென்ற பண்டார வன்னியனின் படை, வெற்றிலைக்கேணி பெஸ்சூற்றர் கோட்டையைக் கைப்பற்றியது. குமாரசிங்க முதலியார் தலைமையில் கண்டாவளையூடாக இயக்கச்சிக்குச் சென்ற வன்னி வீரர்கள், பைல் கோட்டையைக் கைப்பற்றினர். பண்டார வன்னியன் தலைமையில் சென்ற படை ஆனையிறவுக் கோட்டையைக் கைப்பற்றியது இக்கோட்டைகளில் இருந்த படையினர் அழிக்கப்பட்டனர். பலர் யாழ்ப்பாணத்திற்குத் தப்பி ஓடினர். தாம் கைப்பற்றிய கோட்டைகளைத் தகர்த்து விடுமாறு பண்டாரவன்னியன் கட்டளையிட்டான் பைல், பெஸ்சூற்றர் கோட்டைகளின் ஒரு பகுதி தகர்க்கப்பட்டது. ஆனையிறவுக் கோட்டையின் நான்கு கொத்தளங்களும் தகர்க்கப்பட்ட நிலையில், ஆங்கிலேயரின் படை பெருந் திரளாக நெருங்கி வந்தமையால், பண்டாரவன்னியன் தன் படைவீரர்களுடன் கச்சிலைமடுவுக்குப் பின்வாங்க நேர்ந்தது.

இம்மூன்று கோட்டைகளும் மீண்டும் பலப்படுத்தப்பட்டன. அத்துடன் அனுமதியின்றி எவரும் இந்தக் கோட்டைகளுக்கு இடைப்பட்ட பிரதேசங்களூடாகச் சென்று வரக்கூடாது எனக் கட்டளையிடப்பட்டதுடன், கோட்டைகளுக்கு இடைப்பட்ட நிலங்களில் பனை வடலிகள் வளர்க்கப்பட்டன. கேர்ணல் பார்பட் (Colonel Barbut) என்பவர் யாழ்ப்பாணக் கலெக்டராக இருந்தபோது, யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கும் கண்டிக்கும் செல்வோரைக் கடும் சோதனைக்குள்ளாக்குமாறு இந்த ஊடுபோக்கு நிலையங்களுக்கு உத்தரவிட்டிருந்தார் ஐயமுடையோரைத் தடுப்பதற்கும் அனுமதியளித்தார். ஒவ்வொரு பிரயாணியும் பிரயாண வரி செலுத்திப் பயண உத்தரவுச் சீட்டுப் பெற்றுத்தான் இப்பகுதிகளைக் கடக்க வேண்டுமெனவும் பணித்தார். பண்டாரவன்னியன் கற்சிலைமடுவில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட பின்னர், வன்னிப் பிரதேசம் ஆங்கிலேயராட்சிக்குட்பட்டது. வன்னிப் பகுதிகளில் யாழ்ப்பாண மக்கள் குடியேற வேண்டுமென்பதற்காக வன்னிக் கலெக்டராக இருந்த றேணர் (Turnaur) என்பவர் பல வரிச் சலுகைகளை அளித்தார்.

இன்று தென்னஞ் சோலையாக விளங்கும் பச்சிலைப் பள்ளி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில்கூட காட்டுப்பிரதேசமாகவே விளங்கியது. 1841 ஆம் ஆண்டு ஹாடி (Hardy என்ற ஆங்கிலேயன், பச்சிலைப்பள்ளியில் புகையிலைச் செய்கை பண்ணவென 10 ஏக்கர் காட்டினை ஆட்சியாளரிடமிருந்து விலைக்கு வாங்கினான். ஆனால், புகையிலை வைப்பதற்குப் பதிலாகத் தென்னம் பிள்ளைகளை நட்டான். அது நன்கு வளர்வது கண்ட பலர், பச்சிலைப் பள்ளியில் காட்டு நிலங்களை வாங்கத் தலைப்பட்டனர். ஏக்கர் 5 சிலிங் வீதம் 7000 ஏக்கர் அவ்வாறு விற்கப்பட்டது. 1860 வரை யாழ்ப்பாணத்தவர் எவருக்கும் இங்கு தோட்டம் இருக்கவில்லை. ஆக 1860 இல் கொழும்பு சீ. நன்னித் தம்பி முதலியார், கிளாலியில் முதன்முதல் தென்னந் தோட்டம் வாங்கிய தமிழராவார். பச்சிலைப்பள்ளியில் தென்னந்தோட்டங்கள் விருத்தியடைந்ததும், ஆனையிறவின் முக்கியத்துவம் இன்னமும் அதிகரித்தது.

கண்டியும் கைப்பற்றப்பட்டு இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் வசமாகியதும், பைல், பெஸ்சூற்றர் கோட்டைகள் கைவிடப்பட்டன. அவை கால கதியில் சிதைந்துபோயின. ஆனையிறவுக் கோட்டை முகாம் மட்டும் அவ்வேளையில் முக்கியம் பெற்றிருந்தது. எனினும், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆங்கிலேயருக்குத் தெரியவில்லை. அதனால், ஆனையிறவுக் கோட்டையை அவர்கள் தாம் தங்கிச் செல்வதற்கேற்றதொரு உல்லாச விடுதியாக்க விரும்பினர். ஆனையிறவின் அமைவிடத் தன்மையையும், மழைக்காலத்தில் கடலால் சூழப்பட்டு அழகாகக் காட்சி தரும் கோட்டையையும் அக்காலத்தில் வலசைவரும், பறவையினங்களும் அவர்களைக் கவர்கின்றன. அதனால், கொத்தளங்களை இழந்த நிலையில் ஆனையிறவில் நின்றிருந்த கோட்டையின் மேற்புறத்தில், உல்லாச விடுதி ஒன்றினைக் கட்டினர். அது இன்றுமுள்ளது. அச் சூழலைப் பறவைகள் சரணாலயமாகவும் பிரகடனம் செய்தனர்.

மூன்று தொல்லைகள் ஆனையிறவுச் சூழலில், ஆங்கிலேயர் காலத்தில் காணப்பட்டன ஒன்று யானைகளின் தொல்லை, பயணிகளைக் காட்டுப் பாதைகளில் குறுக்கிடும் யானைகள் துன்புறுத்தின. யானைகள், மனிதரால் அடிக்கடி பிடிக்கப்பட்டு வந்ததால், அவை மனிதரைக் கண்டதும் மூர்க்கம் கொண்டன. இரண்டாவது காட்டுக் காய்ச்சல், பயணிகளைக் காட்டுக் காய்ச்சல் அடிக்கடி பிடித்துக் கொண்டது. மூன்றாவது கள்ளர் பயம். பயணிகளையும், பொதிமாட்டு வியாபாரிகளையும், பாரவண்டில் வர்த்தகர்களையும் வழி மறித்துக் கள்வர்கள் சூறையாடினர். போக்கறுப்புப் பகுதியில், பயணிகளின் காதுகள் துண்டாடப்பட்டு, நகைகள் களவாடப்பட்டன இவை காரணமாக ஆனையிறவைக் கடந்து செல்லும் பயணிகளின் நன்மைக்காக, ஆங்காங்கு மடங்களும், (விடுதிகள்) பொதுக்கிணறுகளும் அமைக்கப்பட்டன. கண்டாவளை, வட்டக்கச்சி, கனகராயன் குளம் ஆகிய பகுதிகளில் விடுதிகள் அமைக்கப்பட்டு, விடுதிக் காவலர் நியமிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தையும், மாத்தளையையும் இணைத்து ஒரு கல்வீதி அமைக்கப்பட வேண்டிய அவசியம் ஆங்கிலேயரால் உணரப்பட்டது. முதற்கட்டமாக ஆனையிறவிலிருந்து பணிக்கன் குளம் வரை 24 கட்டைகளுக்கு வீதியமைக்க முடிவாகியது. அதற்கு முதற்கட்டமாக, ஆனையிறவின் இறக்கத்தைத் தூர்த்து வீதியமைக்கக் கூடிய கடலணை ஒன்று கட்டுதல் அவசியமாகியது.

(வளரும்)

## புகையிரதத் திணைக்களத்திற்கு
# யாழ் ரயில் சேவை ரத்து 10 கோடி ரூபா நஷ்டம்

கொழும்பு காங்கேசன் துறைக்கான புகையிரத சேவை பாதிக்கப்பட்டதால் மாதம் ஒன்றிற்கு ஒரு கோடி ஐந்து இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகப் புகையிரதத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கையையடுத்து வடபகுதிப் புகையிரதச் சேவை கடந்த ஒரு வருடமாகப் பாதிக்கப்பட்டதால் புகையிரதத் திணைக்களத்திற்கு பத்துக் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 38

# ஆகஸ்ட் மாதம் முதல் தனியார் பாதுகாப்புச் சேவை

ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலையில் தனியார் பாதுகாப்புச் சேவையினர் கடமையாற்ற உள்ளனர். அவர்கள் ஊழியர்களை அடையாளம் காணுமுகமாக சகல ஆஸ்பத்திரி ஊழியர்களும் தங்கட்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளை அணிந்திருக்க வேண்டுமென சுகாதார சேவைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இம்மாதத்திலிருந்து யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்துவந்தகாவலாளி முறை இரத்துச் செய்யப்படுகிறது.

# தமிழ் உயர் அதிகாரிகள் கிழக்கில் புறக்கணிப்பு

கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் சிங்கள உயர் அதிகாரிகளுக்கு கூடிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளபோது அதே பதவியில் உள்ள தமிழ் அதிகாரிகளுக்கு குறைந்த அதிகாரங்களே வழங்கப்பட்டுள்ளன.

வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது நேர் முகப் பரீட்சை நடாத்தவோ, வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கவோ தமிழ் உயர் அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் மறுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை சிங்கள உயர் அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது விடயமாக தமிழ் அதிகாரிகள் அமைச்சுக்குத் தெரிவித்த போதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 38

## மாணவர்கள் உலர் உணவு தயாரிப்பு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றியத்தினர் ஆனையிறவு இராணுவ முகாமைக் கைப்பற்றும் போரில் ஈடுபட்டுள்ள போராளிகளுக்கு உணவு வசதி செய்து கொடுக்கும் வகையில் பெருமளவிலான உலர் உணவுப் பொருள்களைத் தயாரித்து வழங்கியுள்ளனர்.

போராளிகளுக்கான உணவுகளைத் தயாரிப்பதில் உயர்தர வகுப்பு மாணவ மாணவிகள் அனைவரும் பங்களித்தது குறிப்பிடத்தக்கது. 12

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ் பல்கலைக்கழக அனைத்து பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கும் இன்று (29. 7. 91) காலை 10 மணிக்கு மாணவரவை அலுவலகத்தில் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

## ஊரடங்கு மீண்டும் அமுல்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் மீண்டும் நேற்று முதல் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிலதினங்களுக்கு முன்னரே இம் மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வெற்றிவேண்டி பூசை

களத்தில் நிற்கும்புலிகளுக்கு வெற்றியும் ஆசியும்வேண்டி கற்கோவளம் பகுதிமக்கள் நேற்று வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தில் விசேட பூசையும் ஆராதனைகளும் செய்தனர். 38

## யுத்தவிமானங்கள் நடமாட்டம்

பலாலியிலிருந்து யுத்தப் பிரதேசமான கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதியைநோக்கி படைவிமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்கின்றன இதே போல் கட்டைக்காட்டிலிருந்தும் பலாலியைநோக்கிச் செல்லுகின்றன.

இடைவிடாது இவ் விமானங்கள் நேற்று முன் தினம் இரவிலிருந்து தொடர்ந்து வடமராட்சி வடக்கு, கிழக்குப் பகுதியால் செல்கின்றன 79

## இடம்பெயர்ந்தோர் சங்கம்

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் நலன் கருதி காரைநகர் இடம் பெயர்ந்தோர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கிளை அலுவலகங்கள் யாழ்ப்பாணதிதிலும், சுளிபுத்திலும் திறக்கப்படவுள்ளதாகச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். 33

## இனந்தெரியாதவர் மரணம்

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் சைக்கிளில் வந்த சுமார் 50 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் மாரடைப்பினால் திடிரென நேற்றுமாலை 5. 30 மணியளவில் இறந்துள்ளார். ப 11

## மாணவருக்கு அழைப்பு

வடமராட்சி கிழக்கில் க. பொ. த. உயர்தர வகுப்புக்களில் பயிலும் மாணவர்களும், உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் இன்று வடமராட்சி கோட்டக்கல்விப்பணிமனைக்கு சமுகம் தரும்படி உதவிக்கல்விப்பணிப்பாளர் அவர்கள் கேட்டுள்ளார். (43)

# அடுப்பில் நெருப்பு மூட்டிய நான் எதிரி முகாமுக்கு தீமூட்டச் செல்கிறேன்
## துணைப்படையில் சேர்ந்துள்ள தாய் சபதம்!

''தற்போது நடக்கும் இப் போரில் எல்லாத் தரப்பினரும் பங்குபற்ற வேண்டும். குடும்பத் தலைவிகள் மட்டும் விதிவிலக்கல்ல அவர்களும் வீட்டைப் பூட்டி போருக்குச் செல்லவேண்டும். எமக்கென நாடு இருந்தால் தானே நாம் எமது வீட்டில் நிம்மதியாக இருக்க முடியும்.''

இவ்வாறு ஆனையிறவு யுத்த முனைக்குச் செல்லும் குடும்பப் பெண் திருமதி வே. இலங்காதேவி (59) முரசொலிக்குத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் துணைப்படைப் பிரிவில் சேர நேற்றுப் பலர் கோண்டாவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்திற்கு வந்திருந்தனர்.

இவர்களில் சிலா நேரடியாகவே யுத்த முனைக்குச் சென்று அங்கேயே பயிற்சியெடுக்க விருப்பம் தெரிவித்தனர்.

இவர்களுள் பெண்மணியான பொலிகண்டியைச் சேர்ந்த திருமதி இலங்காதேவி நான்கு பிள்ளைகளுக்குத் தாயார். பேரக்குழந்தைகளையும் கண்டவர்.

யுத்த முனைக்குச் செல்வது குறித்து கேட்டபோது அவர், ''இளங் குருத்துகள் எங்களுக்காக இரத்தம் சிந்துவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. இதனால் அப் பிள்ளைகளுக்கு என்னால் முடிந்த உதவியை யாவது செய்யலாம் என்றே நான் அங்கு போகிறேன்'' என்றார் ஆவேசமாக.

''எமது காலத்திலிருந்த தமிழ் அரசியல் வாதிகள் விட்ட தவறினாலேயே இன்று இந்தப் புதிய இளம் தலைமுறை இரத்தம் சிந்த வேண்டியுள்ளது.

இது அடுத்த தலைமுறைக்குச் செல்லக் கூடாது என்பதாலும் அன்று நாம் விட்ட அரசியல் தவறுக்கு பிராயச்சித்தமாகவே யுத்த முனை செல்கிறேன்.

வீட்டில் இருந்து அடுப்பில் நெருப்பு மூட்டிய நான், எதிரியின் முகாமுக்கு தீ மூட்டுவேன் எனச் சபதமெடுக்கும் அத்தாய், புலிகள் எனக்கு ஆயுதம் தருகிறார்களோ தெரியாது ஆனால் நான் அங்குள்ள போராளிகளுக்கு உயிரைக் கொடுத்தாவது வேண்டிய உதவிகளைச் செய்வேன்'' என்றார்.

தமிழீழத் தாய்மார்களுக்கு நீங்கள் கூறும்அறிவுரை என்னஎனக்கேட்டபோது, நான் முதலில் செல்கிறேன். பின்னால் வேறு பலரும் வருவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

வீட்டைப் பூட்டி நாட்டைக்காக்க முன் வாருங்கள் இதுவே நான் தாய்மார்களுக்கு விடுக்கும் அறைகூவல் என்றார் அவர்.

இவருடன் நேற்று பலரும் நேற்று மாலை ஆனையிறவு களம் செல்ல ஆயத்தமாக இருந்தனர். தாம் பலமுறை யுத்தத்தில் ஈடுபட விரும்பியபோதும் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை இப்போது கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை இழக்கத்தயாராக இல்லை என்ற கருத்தையே அனைவரும் தெரிவித்தனர்.

## தேமதுரத்தமிழ் கனடா வானொலியில்

கனடாவில் ''தேமதுரத் தமிழ்'' என்ற வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டு வருகிறது. ஏசியன் கள்சரல் நெற்வேக்கின் எனும் நிறுவன ஆதரவில் இந்த தேமதுரம் என்ற தமிழ் நிகழ்ச்சி ஒன்ராறியோ எனும் மாநிலத்தில் ரொரன்ரோ நகரில் இருந்து ஒலிபரப்பப்படுகிறது.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இரவு 11 மணி முதல் 12 மணி வரை இது ஒலிபரப்பாகும்.

## அதிபர் பதவியுயர்வு நேர்முகப்பரீட்சை

இலங்கைக் கல்விச் சேவையில் இரண்டாம், மூன்றாம் தர நிரந்தர அதிபர்களாகச் சேவையாற்றிவரும் அதிபர்களை அடுத்த தரங்களுக்குப்பதவியுயர்வுசெய்வதற்காகநடாத்தப்படவுள்ள நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதியாகும்.

5 வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்த இரண்டாம் தர அதிபர்கள் முதலாம் தரத்திற்கும் 3 வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்த மூன்றாம் தர அதிபர்கள் இரண்டாம் தரத்திற்கும் பதவி உயர்வு பெறுவதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களென்று 1991.6.28 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (12)

## தனியார் வீடுகளிலும் அகதிகள் தஞ்சம்

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் வடமராட்சி கிழக்கின் ஏனைய பகுதிகளில் 15 முகாம்களில் தங்கியுள்ளனர்.

இந்த 15 முகாம்களில் 878 குடும்பங்களும் தனியார் வீடுகளில் 438 குடும்பங்களும் தங்கியுள்ளனர். தேவாலயங்களிலும் பாடசாலை இடமில்லாததன் காரணமாகவே இவர்கள் தனியார் வீடுகளில் தங்கியுள்ளனர்.

யாழ் மாவட்டத்தின் ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் 661 குடும்பங்கள் தங்கியுள்ளன என்றும் இறுதியான புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. (43 50)

## காவிரிநீர் பங்கீடு தொடர்பாக
# அமைச்சர் சிதம்பரத்தை ஜெயலலிதா சாடுகிறார்

தமிழ் நாடு கர்நாடக மாநிலங்களுக்கு இடையிலான காவிரிநீர் பிரச்சினையை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு மத்திய அரசு விட்டமையை முதலமைச்சர் ஜெயலலிதா கண்டித்துள்ளார்,

இதற்குக் காரணமாக இருந்த அமைச்சர் சிதம்பரத்தையும் அவர் சாடியுள்ளதாக இந்திய வானொலி குறிப்பிட்டது.

தேர்தல் காலங்களில் அ. தி. மு க. காங்கிரஸ் கூட்டு பிரசார கூட்டங்களில் ஜெயலலிதாவுடன் சிதம்பரமும் பல தடவை கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

### கிழக்குப்...

குதல்கள திடீரென அதிகரித்ததையடுத்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

### மடு..

உணவு செல்வதில் கடந்த ஒருமாதத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

ஊரடங்கைக் காரணம் காட்டி படையினர் வவுனியா அநுராதபுரம் பகுதிகளில் வழிமாற்றுத்தடை செய்கின்றனர். இதன் காரணமாக உணவு நிலைமை மிகவும் மோசம் அடைந்துள்ளதுடன் குழந்தைகள் நோய்வாய்ப்பட வேண்டிய நிலைமையும் நேரிடுகின்றது. 33

### விமானக்...

களுக்குட்பட்ட பகுதிகளில் நித்தியவெட்டை, கேவில், சோரன்பற்று ஆகிய குடிமனைகளில் எரிகுண்டுகள் வீசித்தாக்கப்படுவதாகத்தெரிகிறது. (79)

### உள்ளூராட்சி...

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை (29-7-91) பிற்பகல் 4மணியளவில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல பிரதேசசபைப் பொறுப்பாளர்களாலும் இப் பெயர்ப்பட்டியல்கள் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 'பாலம்' அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும். 12

## விசேட பரீட்சை முடிவுகள்

யாழ் மாவட்டத்தில் 1990 விசேட க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகளை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து தரைமார்க்கமாக எடுத்துவர முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மட்டக்களப்பில்...

நிமிடத்தாக்குதலில் எண்மர் கொல்லப்பட்டதுடன் படையினர் ஆயுதங்களையும் கைவிட்ட நிலையில் பின்வாங்கினர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு;

- ★ ரி-56-2 ரகத்துப்பாக்கி -4
- ★ அதற்குரிய ரவைகள் -31
- ★ ரி-56-1 ரகத்துப்பாக்கி -1
- ★ ரி-81 ரகத்துப்பாக்கி - 2
- ★ அதற்குரிய ரவைக் கூடுகள்-1
- ★ ஏ. கே. எல். எம்.ஜி ரவை கூடு - 4
- ★ ஐ. எம். ரவைகள் - 300
- ★ கவச அங்கிகள் - 4
- ★ தொலைத் தொடர்பு சாதனம் -1
- ★ ஜே. ஆர். கைக்குண்டு -1

இதேவேளை இத் தாக்குதல் விசேட அதிரடிப்படை மீதே நடாத்தப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு ஒத்துக் கொண்டது.

நேற்று முன்தினமும் செங்கலடிப் பகுதியில் புலிகளின் தாக்குதலால் ஏழு படையினரும், ஒரு ரெலோ உறுப்பினரும் கொல்லப்பட்டது தெரிந்ததே. ப-11

### கடற்படை சுட்டு..

காலை5. 45 மணியளவில் நடைபெற்றது.

ஜெயராசா ஜீவன் (15 வயது) என்ற இளைஞனே கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானவராவார்.

இறந்தவரின் மைத்துனர் கடலில் குதித்து நீந்தியதால் உயிர்தப்பினார்.

இவர்களுக்கு அருகில் கட்டுமரத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இருவர் கடலில் குதித்து நீந்திக்கரைசேர்ந்தனர். (43 50)

### திருநெல்வேலியில்—

அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று மாவீரர்களின் புகழுடம்புகள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் மாலை தீயுடன் சங்கமமாகின.

நேற்று நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போராளிகளின் விவரம்: நிரூபன்(வே. பாலச்சந்திரன் - கிண்ணியா), மொராஜி(அ. அரவிந்தன் - கட்டைப்பறிச்சான்), சுஜன்(கோ. புஸ்பராஜா - மூதூர்), சுகீன் (ஜெகதாஸ் - உரும்பிராய்), கேசிகன் (பரஞ்சோதிநாதன் நியூட்டன் - பண்டத்தரிப்பு), உமாசங்கர் (ரவி சி. செஞ்சியல் - குருநகர்), வர்மன்(சு. பாஸ்கரமூர்த்தி - வாழைச்சேனை), கார்த்திகா(ரமணி ராஜரட்ணம் - நாவாந்துறை), சிகிலா (ரஞ்சனி நடராஜா - சுளிபுரம்) (ப-11, 79)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 29.07.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.